# 3. Amrita Cyber Nation 2025




அம்ருதா விஸ்வ வித்யாபீடத்தின் சென்னை வளாகத்தில் நடைபெற்ற அம்ருதா சைபர் நேஷன் 2025 மாநாட்டில் டிஎஸ்சிஐ சிஇஓ விநாயக் கோட்சே, வால்வோ குழுமத்தின் சைபர் பாதுகாப்பு தலைவர் ராம்குமார், வித்யாபீட நிர்வாக இயக்குநர் சம்பூஜ்ய ஸ்வாமி வினயாம்ருதானந்தபுரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## அம்ருதா விஸ்வ வித்யாபீடத்தில் சைபர் மாநாடு

**சென்னை**

அம்ருதா விஸ்வ வித்யாபீடத்தின் சென்னை வளாகத்தில் அம்ருதா சைபர் நேஷன் 2025-ஐ தொடங்கியது.

இந்த நிகழ்வில், தகவல் பாதுகாப்பு கவுன்சில் ஆஃப் இந்தியாவின் தலைமை நிர்வாக அதிகாரி விநாயக் கோட்சே, வால்வோ குழுமத்தின் சைபர் பாதுகாப்பு தலைவர் ராம்குமார் ஆகியோர் பங்கேற்றனர். இதில் ராம்குமார் பேசும்போது, நவீன டிஜிட்டல் பொருளாதாரத்தில் ஏஐ அறிவுத்திறன், தரவு பாதுகாப்பு, தொழில்-தயார் திறன்கள் குறித்த தேவையை எடுத்துக்காட்டினார்.

மேலும் அம்ருதா விஸ்வ வித்யா பீடத்தின் நிர்வாக இயக்குநர் சம்பூஜ்ய ஸ்வாமி வினயாம்ருதானந்தபுரி, முதல்வர் வி.ஜெயகுமார், சிஎஸ்இ துறைத் தலைவர் எஸ். சவுந்தர்ராஜன் மற்றும் திட்டத் தலைவர் சிஎஸ்இ-சிஎஸ் எஸ். உதயகுமார் ஆகியோர் விழாவுக்கு தலைமை தாங்கினர். ஏசிஎன் காபி டேபிள் புத்தகத்தின் வெளியீடு மற்றும் சைபர் கல்வி, ஏஜென்டிக் ஏஐ மற்றும் டிஜிட்டல் திறன் குறித்த நிபுணர் அமர்வுகள் நடைபெற்றன.

இந்த சைபர் மாநாட்டில் ராமநாதன் கண்ணபிரான் (ஜோஹோ) மற்றும் மனோஜ் காஷ்யாப் ஆர் (எதிகல் பைட்ஸ்) ஆகியோரைக் கொண்ட குழுவினர் கருத்துரையாற்றினர்.

டீப் ஃபேக்குகள், பெகாசஸ் ஸ்பைவேர், எல்எல்எம் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் ப்ராம்ப்ட் இன்ஜெக்சன் தாக்குதல்கள் போன்ற சைபர் அச்சுறுத்தல்கள் குறித்து இதில் கலந்துரையாடப்பட்டது. அதே நேரத்தில் ஜீரோ டிரஸ்ட் மாடல்கள், வலுவான அங்கீகாரம் மற்றும் நெறிமுறை ஏஐ அமைப்புகளின் தேவையும் இந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

**Hindu Tamil Thisai**